**தலைப்பு 270 – அம்பாறை மாவட்ட செயலகம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அம்பாறை மாவட்ட செயலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2021 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 வருமான பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை விற்பனை செய்தமையால் கிடைத்த ரூபா 522,734 ஆன ஏனைய செலவினத் தலப்பின் கீழ் (2006-0-2-0-20) ரூபா 218,830 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 இவ்வாறான தவறுகளை வருமானத் தலைப்பிற்கு பதிவு செய்யாமல் உரிய வருமானத் தலைப்பிற்கு வைக்குமாறு உரிய பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பற்கு முன்னர் அனைத்து வருமானங் களுக்குரிய வருமானம் உரிய வருமானத் தலைப்புகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 மீண்டெழும் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அம்பாறை நகர சபைக்கு செலுத்த வேண்டிய வீதவரி மற்றும் வரி ரூபா 245,914 தொகை நிதிக் கூற்றுக்களில் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பு (iii) இல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு சரியாக கணக்கு வைப்பதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய வீதவரி மற்றும் வரி பெறுமதி நிதிக் கூற்றுக்களில் பொறுப்பாக காண்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 பிரதேச செயலகங்களுக்குரிய மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 776,750 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் 08 பிரதேச செயலகங்களினால் பயன்படுத்தப்பட்டிருந்த 32 அலுவலக கட்டிடங்களுக்கான வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்திற்குரிய மதிப்பீட்டுப் பெறுமதி விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் வழங்கப்படவில்லை. நினைவூட்டல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிடைத்தவுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அலுவலக கட்டிடங்களில் வீதவரி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.5 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பிணைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணைப் பதிவேட்டை பேணிச்செல்ல வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | மின்சார உபகரணங்கள் பதிவேடு நி.பி இன் பிரகாரம் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மின்சார பாகங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேட்டை பேணிச் செல்ல வேண்டும். |
| (இ) | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் மற்றும் இழப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சேதங்கள் மற்றும் இழப்பு பதிவேடு நி.பி இன் பிரகாரம் பேணிச் செல்லப்படுவதுடன் நாளதுவரையாக பேணிச்செல்வதற்கு நடவடிக்கை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சேதங்கள் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேட்டை பேணிச்செல்ல வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்படும். | |
| (ஈ) நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நி.பி இன் பிரகாரம் பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு தொடர்பான பதிவேட்டை பேணிச்செல்ல வேண்டும். |

### 1.6.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறையல்லாத சொத்துக்கள் கூற்று ஏ.சீ.ஏ. 6 இல் குறிப்பிடப்பட்டிருந்த 2020.01.01 இல் உள்ளவாறு ஆரம்ப மீதி திருத்தம் செய்யப்பட்டமையால் சொத்துக்களின் பெறுமதிக்கு சேர்க்கப்பட்ட ரூபா 35,949,298 தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அடுத்த ஆண்டின் ஆரம்ப மீதிகளுக்காக கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிய தருகின்றேன். | நிதிக் கூற்றுக்களுடன் ஆரம்ப மீதிகள் திருத்தங்களுக்குரிய கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு இணக்கக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கெடுப்பனவை மேற்கொள்வதற்காக ரூபா 5,804,101,000 ஆன கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதும் ரூபா 4,737,886,844 ஆன கட்டுநிதி மாத்திரம் கிடைக்கப் பெற்றிருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட மற்றும் கிடைத்த கட்டுநிதிக்கு இடையே வேறுபாடு ரூபா 1,066,214,156 ஆக இருந்தது | கிடைத்த கட்டுநிதியான ரூபா 4,737,886,844 இற்கு மாத்திரம் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. | கட்டுநிதி முகாமைத்துவம் தொடர்பில் கவனத்திற் கொள்ள வேண்டும். |

**2.2 வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலிலும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 2,455,800 தொகை உரிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தினால் இதுவரை குறித்த பெறுமதியில் ரூபா 1,091,800 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையை கட்டு நிதியை பெற்றுக்கொள்ளும் போது மிக விரைவில் தொடர்புபடுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சேகரிக்கப்படும் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை உரிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் 23:18 ஆம் பிரிவு xii ஆம் அத்தியாயம் | உத்தியோகத்தர்கள் நாட்டிற்கு வெளியே கழிக்கும் விடுமுறை தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து திணைக்களத் தலைவரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் பிரதேசத்திற்கு வெளியே கழிக்கும் விடுமுறை (வெளிநாட்டு விடுமுறை) தொடர்பாக அறிக்கை யொன்றை எதிர் காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் 3.5 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் 5 சதவீதத்திற்கு மேற்பட்ட மூலதனச் செலவினங்களின் 03 சேமிப்புக்கள் தொடர்பாக முறையான காரணங்கள் குறிப்பிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.4 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 மார்ச் 29 ஆந் திகதிய 08/2017 ஆம் இலக்க சமூர்தி அபிவிருத்தி திணைக்களத்தின் வாழ்வாதார சுற்றறிக்கை மற்றும் 2019 செப்தம்பர் 10 ஆந் திகதிய டீஎஸ்டீ/எச்டீ/ எஸ்டப்ளியு/14/16 ஆம் இலக்க திருத்திய சுற்றறிக்கையின் பிரகாரம் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு சமூர்த்தி உதவி முத்திரை வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 10 சமூர்தி வங்கிகளால் 43 குடும்பங்களுக்காக கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 2,993,215 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சமூர்தி நலனாலிகளுக்கு கூடுதலாக வழங்கிய உதவித்தொகையை பகுதி பகுதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு முரணாக செலுத்தப்பட்ட கூடுதலான கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | உஹன பிரதேசத்தில் கலாசார நிலைய நிர்மாணிப்பதற்காக புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சினால் 2020 பெப்ரவரி 02 ஆந் திகதி ரூபா 4,026,559 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும் இந்த நிர்மாணத்திற்குரிய பெறுகை செயற்பாடுகள் மேற் கொள்ளாமையால் இந்த நிதி ஏற்பாடு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்று காரணமாக அலுவலக செயற்பாடுகள் மந்த கெதியான நிலைமையில் காணப்பட்டமையால் செயற்திட்டத்தை செயற்படுத்த முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சம்மாந்துறை மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகங்களில் வீதி புனரமைப்பு மற்றும் மின்சார இணைப்பு தொடர்பாக கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாண அலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் மீளாய்வாண்டில் ரூபா 250,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும், சாத்தியவள ஆய்வு அறிக்கை மற்றும் மதிப்பீட்டு அறிக்கை உரிய காலப் பகுதிகளில் சமர்ப்பிக்கப்படாமையால் செயற்திட்டம் கைவிடப் பட்டிருந்தது. | அறிக்கையொன்று உரிய காலத்தில் சமர்ப்பிக்காமை காரணமாக தொடர்பாக பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க தேவையான ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளன. | சாத்தியவள ஆய்வு அறிக்கை மற்றும் மதிப்பீட்டு அறிக்கை உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்து செயற் திட்டத்தை செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | கல்முனை பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கமு/கமு/ கார்மேல் பாதிமா தேசிய பாடசாலையின் உள்ளக அரங்கினை நிர்மாணிப்ப தற்காக பொருளதார வலுவூட்டல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற் திட்டத்திற்காக தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சினால் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,000 ஆன நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதும், இச்செயற்திட்டம் உரிய காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டம் 2020 ஆம் ஆண்டில் தொடர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடக்குவதற்காக அங்கீகாரம் மற்றும் நிதியை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடப்பட்ட போதும் அதற்காக அங்கீகாரம் கிடைக்காமையால் செயற்திட்டம் கைவிடப்பட்டது | உரிய காலப்பகுதியில் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினால் மஹாஓய பிரதேசத்தில் முதியோர்களை பராமரிக்கும் நிலையமொன்றை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் அந்நிர்மாண வேலைகள் 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 ஒக்தோபர் 13 ஆந் திகதி பூர்த்தி செய்ய | கொவிட் - 19 தொற்று மற்றும் ஏனைய காரணங்களின் பேரில் உரிய காலப் பகுதியில் வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. அத்துடன் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்குரிய | உடன்படிக்கையின் பிரகாரம் செயற் திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டியிருந்தது. இந்த ஒப்பந்தம் ரூபா 2,488,475 இற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப் பட்டிருந்த போதும் 2021 ஏப்ரல் 21 ஆந் திகதி வரை ரூபா 1,082,799 அல்லது 43 சதவீதம் பெறுமதியான வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | ரூபா 1,082,799 தொகை கொடுப்பனவு செய்து எஞ்சிய தொகை வைப்புச் செய்யப்பட்டது. |

### 3.3 நட்டங்களும் சேதனங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனமொன்றிற்கு 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 02 வாகன விபத்துக்களுக்காக காப்புறுதி கம்பனியிடமிருந்து மீள் நிரப்பப்படாத ரூபா 635,325 தொகை நிதிக்கூற்றுக்களில் நட்டம் மற்றும் விட்டுவிடல் தொடர்ான கூற்றில் குறிப்பு (i) இல் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. | இவ்வாகன விபத்துகளுக்காக பரிசோதனை முழுமையாக பூர்த்தி செய்யப்படாமையால் தவறுதலாக நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான கூற்றில் அவை உள்ளடக்கப்பட வேண்டுமென விடயப் உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வாகன விபத்து மீதான ஏற்பட்ட நட்டம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகளை வழங்கும் போது 04 பிரதேச செயலகங்கள் அறவிடப்பட வேண்டிய நிலுவை குத்தகை ரூபா 5,271,471 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த குத்தகையாளர் களிடமிருந்து நிலுவையை அறவிடுவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | குத்தகை வருமானத்தை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) மாவட்ட செயலகத்திற்குரிய 06 அரச வீடுகளிலில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 338,531 தொகை 2002 ஆம் ஆண்டிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இம்மீதி 06 அரச வீடுகளுக்கு உரித்தாக இருந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது | அரச வீடுகளிலில் இருந்து அறவிடப்பட வேண்டிய வாடகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்குரிய வாகன மொன்றுக்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக காப்புறுதி கம்பனியிடமிருந்து பெற்றுக் கொள்ள கூடியதாக இருந்த ரூபா 4.8 மில்லியனான வாகன காப்புறுதி உரித்து, உரிய காலப்பகுதியில் வேண்டுகோள் விடுக்கப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக 2021.10.08 ஆந் திகதி அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய இழப்பீட்டை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மாவட்ட செயலகத்திற்குரிய வாகன மொன்று 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்வதற்கு கராஜ் ஒன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அதனை மீளப்பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 42-8880 ஆம் இலக்க வாகனத்தை இந்த அலுவலகத்திற்கு கொண்டு வருவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து பரிசோதகரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது. | வாகனத்தை திருத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். |

## 4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடமாக காணப்படும் 76 கிராம சேவையாளர் பதவிகளுக்கு நிரந்தரமாக ஆட்சேர்ப்பு செய்யாமையால் கிராம சேவையாளர் பிரிவுகளில் நிர்வாக நடவடிக்கைகள் மந்தமான நிலைமையில் காணப்பட்டது. | கிராம சேவையாளர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தொடர்பாக அமைச்சிற்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடமை தேவைப்பாடுகளை கருத்திற் கொண்டு ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,364 ஆக இருந்த போதும் உள்ளவாறான 2,163 ஆக இருந்தது. எவ்வாறாயினும் வெற்றிடங்கள் காணப்படுகின்ற 201 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கடமை தேவைப்பாடு அடிப்படையில் பிரதேச செயலக மட்டத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |